


**21. 07. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. தேர்வு வினாத்தாள் கசிவு முறைகேடுகளில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுவது உறுதி செய்யப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்..

2. மனிதவள மேம்பாட்டுத்துறையின் பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனை கூட்டம் முதலமைச்சர் திரு. விஜய் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

3. தமிழக பட்ஜெட் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 5 ஆம் தேதி தொடங்கும் என்று பேரவை தலைவர் திரு. J C D பிரபாகர் அறிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் மாணாக்கரின் புத்தக சுமை குறைக்கப்படும் என்று பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் கூறியுள்ளார்.

5. மாணாக்கரின் உணர்வுகளை புரிந்துகொண்டு நீட் தேர்வை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டும் என்று பா.ம.க தலைவர் டாக்டர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

## இனி விரிவான செய்திகள்

***********

கிரண் ரிஜிஜூ

பிரதமர் திரு.நரேந்திரமோடி நாட்டின் நீண்டகால பிரதமராக பணியாற்றி வருவதற்கு பாராட்டு தெரிவிக்கும் தீர்மானம் தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற குழு கூட்டத்தில் இன்று நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ எதிர்கால தேர்வுகளில் வினாத்தாள் கசிவை தடுக்க அனைத்து தரப்பினரின் ஒருங்கிணைந்த முயற்சிகளுக்கு பிரதமர் அழைப்பு விடுத்ததாக தெரிவித்தார்.

வினாத்தாள் கசிவு உள்ளிட்ட முறைகேடுகளில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதை மத்திய அரசு உறுதி செய்வதோடு இளையோரின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று பிரதமர் உறுதியளித்ததாக கூறினார்.

நீட் வினாத்தாள் கசிவு தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட 13 பேர் தற்போது சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாக பிரதமர் எடுத்துரைத்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பல்வேறு நாடுகளுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்தும் பேசிய பிரதமர் நம் நாட்டின் விவசாயிகளுக்கு இதில் உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாக கூறியதையும் திரு.கிரண் ரிஜிஜூ எடுத்துரைத்தார்.

***********

நாடாளுமன்றம்

நீட் வினாத்தாள் கசிவு உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும் அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா கேள்வி நேரத்தை நடத்த முற்பட்ட போது

நீட் வினாத்தாள் கசிவு குறித்து விவாதிக்க எதிர்கட்சிகள் முழக்கமிட்டனர்.

அவை சுமூகமாக நடைபெற எதிர்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க அவைதலைவர் விடுத்த கோரிக்கைக்கு யாரும் செவி மடுக்காததால் அவை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் பிற்பகல் வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை எதிரொலித்ததால் அவைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் அவையை பிற்பகல் வரை ஒத்திவைத்தார்.

***********

<u>ராகுல்காந்தி</u>

இந்நிலையில் மக்களவை எதிர்கட்சி தலைவர் திரு.ராகுல்காந்தி மக்களவை தலைவர் திரு.ஓம்.பிர்லாவை இன்று சந்தித்து மாணாக்கர் பிரச்சனை தொடர்பான விவாதம் அவையில் நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த திரு.ராகுல்காந்தி மாணாக்கர் மற்றும் அவர்களின் எதிர்காலம் தொடர்பாக இந்த விவாதம் இருக்கும் என்றார்.

***********

<u>பிரதமர்</u>

நாட்டின் குறு உணவு பதப்படுத்தும் பிரிவு அடித்தட்டு மக்கள் குறிப்பாக பெண்கள் இடையே தொழில் முனைவை மேம்படுத்துவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான மத்திய உணவு பதப்படுத்தும் துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வானின் இணையதள பதிவை, சமூகவலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர், உரியநிதி, தொழில்நுட்பம், சந்தை வாய்ப்புகளுடன் சிறு

குறு தொழில் நிறுவனங்கள் மேம்படுத்தப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

இதனால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் வேலை உருவாக்குபவர்களாக வலுப்பெற்று, ஊரக பொருளாதாரம் வலுவடைந்து, சுய சார்பு பாரதம் கட்டமைக்கப்படுவதாக எடுத்துரைத்தார்.

***********

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு மாசிடோனியா நாட்டு அதிபர் Gordana Siljanovska - Davkova- உடன் இருதரப்பு ஆலோசனைகளை இன்று மேற்கொள்கிறார்.

மூன்று நாடுகள் பயணத்தின் இரண்டாம் கட்டமாக மேசிடோனியா சென்றுள்ள குடியரசு தலைவர் அந்நாட்டு பிரதமர் Hristijan Mickoski உடன் வேளாண் அறிவியல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளார்.

***********

முதலமைச்சர்

தமிழகத்தில் மனிதவள மேம்பாட்டுத்துறையின் பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனை கூட்டம் முதலமைச்சர் திரு.விஜய் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது..

அரசு துறையில் உள்ள காலிப்பணியிடங்களை நிதிநிலைமைக்கு ஏற்ப நிரப்புதல், UPSC தேர்வுகளுக்கு தயாராகும் மாணாக்கருக்கு பயிற்சி, அரசு அலுவலகங்களில் பயோ மெட்ரிக் வருகை பதிவு முறையை விரிவுபடுத்துவது குறித்த ஆலோசனைகள் இடம்பெற்றதாக தெரிகிறது.

***********

பட்ஜெட் கூட்டத்தொடர்

தமிழக பட்ஜெட் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 5ஆம் தேதி தொடங்க உள்ளதாக பேரவை தலைவர் திரு. JCD பிரபாகர் அறிவித்துள்ளார்..

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 2026-27ஆம் நிதியாண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை அன்றைய தினமே தாக்கல் செய்யப்படும் என்றார்.

6ஆம் தேதி வேளாண் நிதிநிலை அறிக்கை பேரவையில் தாக்கல் செய்யப்பட உள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார்.

நிதிநிலை அறிக்கை தாக்கலுக்கு பின்னர் அலுவல் ஆய்வுக்குழு கூடி இந்த கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து முடிவு எடுக்கப்படும் என்றார்.

மானியக்கோரிக்கை தொடர்பான விவாதங்கள் நடைபெறுவது குறித்தும் அலுவல் ஆய்வுக்குழு முடிவு செய்யும் என்றார்.

சட்டப்பேரவை நிகழ்வுகள் முழுமையாக நேரலை செய்யப்படும் என்றும், திரு. J C D பிரபாகர் குறிப்பிட்டார்.

வாய்ஸ்

***********

ராஜ்மோகன்

தமிழ்நாட்டில் மாணாக்கரின் புத்தக சுமை குறைக்கப்படும் என்று மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற பாட திட்ட தயாரிப்பு குழு கூட்டத்தில் பேசிய அமைச்சர், புத்தகங்களில் எழுத்துக்களை குறைத்து அதிக வண்ண படங்கள் இடம்பெறும் வகையில் அவை மாற்றி அமைக்கப்படும் என்றார்.

கதைகளின் வடிவில் மாணாக்கருக்கு கணிதம் கற்றுத்தரப்படும் என்றும், AI தொழில்நுட்பத்தின் நுணுக்கங்கள் கற்பிக்கப்படும் என்றார்.

வாய்மொழி கல்வியாக அல்லாமல் காணொலியாக பாடங்கள் பயிற்றுவிக்கப்படும் என்றார்.

வாய்ஸ்

***********

<u>அன்புமணி</u>

மாணாக்கரின் உணர்வுகளை புரிந்துகொண்டு நீட் தேர்வை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் டாக்டர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீட் தேர்வு சமூக நீதிக்கும் மாநில உரிமைக்கும் தமிழக கிராமப்புற மாணாக்கரின் நலனுக்கும் எதிரானது என்று சுட்டிக்காட்டினார்..

நீட் தேர்வில் பல குளறுபடிகள் உள்ளதாக கூறிய அவர், இதனை உணர்ந்து அரசு தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்றார்.

காவிரியின் குறுக்கே கர்நாடகம் மேகதாது அணை கட்டுவது, தமிழ்நாடு மக்களின் பிரச்சனை என்பதால் அதனை தடுத்து நிறுத்த, தமிழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக முதலமைச்சர் அனைத்து கட்சி பிரதிநிதிகளுடன், பிரதமர், மத்திய நீர்வளத்துறை அமைச்சர் உள்ளிட்டோரை சந்தித்து உரிய அழுத்தம் தர வேண்டும் என்றும் அவர் கோரினார்.

சம்பா குறுவை சாகுபடி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றும், சிறு குறு விவசாயிகளின் கூட்டுறவு கடன்கள் ரத்த செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அரசியல் ரீதியான விமர்சனங்கள் செய்யலாம் என்றும் ஆனால் தனிப்பட்ட விமர்சனங்கள் கூடாது என்றும் டாக்டர் அன்புமணி குறிப்பிட்டார்.

***********

<u>ஆர்பாட்டம்</u>

இதனிடையே மேகதாது அணை கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து விழுப்புரத்தில் இந்திய ஜனநாயக கட்சி சார்பில் ஆர்பாட்டம் நடைபெற்றது.

***********

<u>வேலைவாய்ப்பு முகாம்</u>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நாளை மறுநாள் நடைபெறும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் முன்னனி நிறுவனங்கள் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

<u>இருவரி</u>

நாகை மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை ஆட்சித்தலைவர் திரு.பிரவீன்குமார் தலைமையில் நடைபெறுகிறது.

விவசாயிகள் இதில் பங்கேற்று தங்களது கருத்துக்களை தெரிவித்து பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

அரியலூர் மாவட்டத்தில் மக்கள் தொகை சுய கணக்கெடுப்பில் முழுமையான தகவல்களை பொதுமக்கள் அளிக்க வேண்டிய அவசியம் குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திருமதி மிருணாளினி இன்று துவக்கிவைத்தார்.

500க்கும் மேற்பட்ட கல்லூரி மாணாக்கர் இதில் பங்கேற்றனர்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அரசினர் தொழில்பயிற்சி நிலையங்களில் தொழில் பயிற்சி பெற விரும்புவோர் வரும் 31-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

***********

<u>தண்ணீர் திறப்பு</u>

திருப்பூர் மாவட்டம் அமராவதி அணையிலிருந்து பாசனத்திற்காக பிரதான கால்வாய் வழியாக இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

அடுத்த மாதம் 5ஆம் தேதிவரை திறக்கப்படும் இந்த தண்ணீரின் மூலம் 25 ஆயிரத்து 250 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

மேலும் ராமகுளம், கல்லாபுரம், குமரலிங்கம், சர்க்கார் கண்ணாடிபுத்தூர், சோழமாதேவி, கணியூர், கடத்தூர், காரத்தொழுவு ஆகிய 8 பழைய ராஜவாய்க்கால்களின் முதல்போக பாசனத்திற்கு வரும் டிசம்பர் 3ஆம் தேதிவரை தகுந்த இடைவெளியியுடன் 2 ஆயிரத்து 74 மில்லியன் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது.

***********

<u>கோவில்</u>

மதுரை அழகர் கோவில் அருள்மிகு சுந்தர்ராஜ பெருமாள் திருக்கோவில் ஆடிப்பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டம் வரும் 29ம் தேதி நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********